
நந்தி உரைத்த ஞானநூல்

சிவஞான போதம்



சங்கரனடிமை
சிவ பி.எஸ்.சுவாமிநாதன்

உ

திருச்சிற்றம்பலம்

புனிதமெனும் அத்துவிதம் கண்ட மெய்கண்டார் அருளிய

சிவஞான போதம்

(நந்தி உரைத்த ஞானநூல்)

மெய்கண்ட நாதன் விரைகழல் வெல்க!

சங்கரனடிமை

சிவ பி.எஸ்.சுவாமிநாதன்

விலை ரூ.10/-

முல்லை பதிப்பகம்
323/10, கதிரவன் காலனி
அண்ணாநகர் மேற்கு, சென்னை 40
தொலை.: 9840358301
e-mail: mullaipathipagam@yahoo.com

திருச்சிற்றம்பலம்

அருள்திரு மெய்கண்டார் வரலாறு

தேவாரம் பாடிய மூவருள் முதலாவதாக வருபவர் திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் ஆவர். அந்த இருவரின் பாடல்பெற்ற சிவத்தலங்களுள் ஒன்று திருப்பெண்ணாகடம். இது தமிழ்நாட்டில் நடுநாட்டுத்தலம். தற்போது பெண்ணாடம் என்று அழைக்கப்படுவது இத்தலமே.

இவ்வூரில் 777 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்து வந்த சைவ வேளாளர் குடியில் அச்சுதர் களப்பாளர் (அச்சுதகளப்பாளர் எனவும் சொல்லப்படும்) என்ற ஒரு பெரியவர் இருந்தார். அவர் நீண்ட காலமாக குழந்தை இல்லாமையால் மிகவும் வருந்தினர். அவருடைய குலகுரு அருணந்தி சிவாச்சாரியார். அச்சுத களப்பாளரின் வருத்தம் அறிந்த குலகுரு ஒருநாள் தேவார ஏட்டில் கயிறு சார்த்திப் பார்த்தார். திருவருளால் அங்குக் கண்ட திருப்பாடல் சம்பந்தப் பெருமான் பாடிய தேவாரப் பாடல்.

பேய் அடையா, பிரிவுஎய்தும்; பிள்ளையினோடு உள்ளம்நினை
வாயினவே வரம்பெறுவர். ஐயுற வேண்டா ஒன்றும்
வேய்அனதோள் உமைபங்கன் வெண்காட்டு முக்குளநீர்
தோய்வினையார் அவர்தம்மைத் தோயாவாம் தீவினையே

என்பது அப்பாடல்.

இத்திருப்பாடலைக் கண்டு அளவிலா மகிழ்ச்சி கொண்டார் அருணந்தி சிவம். இத்திருப்பாடலில் சொல்லியவாறே அச்சுதர் களப்பாளரைத் திருவெண்காடு சென்று முக்குளம் நீராடிச் சிவபெருமானை வழிபடக் கட்டளையிட்டார். ஆசிரியரின் ஆணையின்படியே மாணவரும் மாணவியோரும் திருவெண்காடு சென்றார். முக்குளம் நீராடிப் பெருமானை வழிபட்டுத் தவம் இருந்தார்.

சில நாளில் சிவபெருமான் திருவருளால் சிறந்ததோர் ஆண் குழந்தையைப் பெற்றார். அக்குழந்தைக்கு சுவேதனப் (வெண்காட்டுப்) பெருமாள் என்று திருப்பெயர் சூட்டி மகிழ்ந்தனர். அக்குழந்தை பெண்ணாகடத்தில் உள்ள தந்தையார் இல்லத்திலும், திருவெண்ணெய் நல்லூரில் இருந்த தாய்மாமன் இல்லத்திலுமாக வளர்ந்து வந்தது. குழந்தை, திருஞானசம்பந்தருடைய அருள் வாக்காலும், பெற்றோருடைய தவ ஆற்றலாலும்,

திருவருட் பதிவினாலும் பிறந்ததால், பிறப்பிலேயே திருவுடையதாகப் பிறந்தது. கருவிலே திருவுடையார் என்று கூறுவதற்கு இலக்கியமாகவும்.

தோன்றின புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று

என்ற திருவள்ளுவரின் கருத்துக்கு இசையவும் தோன்றியவர் மெய்கண்டார்.

குழந்தைக்கு மூன்றாவது ஆண்டு. அப்பொழுது திருவெண்ணெய் நல்லூரில் இருந்து வந்த ஒரு நாள்,

திருக்கயிலாய பரம்பரையில் அகச் சந்தான ஆசிரியருள் ஒருவராகிய பரஞ்சோதி முனிவர் வானத்தின் வழியே வந்து கொண்டிருந்தார். வெண்ணெய் நல்லூர் பகுதியில் வந்தபோது அங்கு வீதியில் விளையாடிக் கொண்டிருந்த வெண்காட்டுப் பெருமானாகிய குழந்தையைக் கண்டார். குழந்தையின் பரிபக்குவம் அறிந்தார். வழிமுறையில் தாம் பெற்ற சிவஞானத்தை அவர்க்கு உபதேசித்து விட்டுச் சென்றார்.

சிவஞானம் பெற்ற சிறுவராகிய வெண்காட்டுப் பெருமாள் அப்போதே மெய்யுணர்வு உடையவர் ஆனார். மெய்யுணர்வாகிய சிவஞானக் கண்ணால் மெய்ப்பொருளைக் கண்டு உணர்ந்த பிள்ளை அன்று முதல் மெய்கண்டார் ஆயினார்.

தாம் கண்டுணர்ந்த மெய்யினை உலகத்தவர் பலரும் கண்டு இன்புற வேண்டுமென விரும்பினார். அதுவரை உபதேசமுறையில் மட்டும் வந்த சிவஞான போதத்தை அனைவரும் அறியச் செந்தமிழ்நூல் வடிவில் உருவாக்கி வழங்கினார்.

பன்னிரண்டு சூத்திரங்களில் மெய்கண்டார் அருளி வழங்கிய தமிழ்ச் சிவஞானபோதமே இன்று சித்தாந்தச் சைவத்திற்கு முதன்மையான ஒரு முழு நூலாகப் போற்றப்பட்டு வருகிறது.

சிவஞானபோதம் அருளிய மெய்கண்ட தேவர்பால் அணுகிச் சிவஞானம் கைவரப்பெற்ற மாணாக்கர் பலர். அவருள் தலை மாணாக்கர் ஆனவர் குலகுருவாக விளங்கிய அருணந்தி சிவம் என்றால் மெய்கண்டார் பெருமையை யாரே அளவிட்டு கூறவல்லவர்!

இவ்வாறு சைவ உலகம் வாழ வழிசெய்த மெய்கண்ட தேவர் சிறந்த சிவானுபவச் செல்வராக விளங்கி ஒரு ஐப்பசி மாதத்து சுவாதி நன்னாளில் என்றும் இடையறாச் சிவப் பேரின்பத்தில் திளைத்தருளினார்.

திருச்சிற்றம்பலம்.

மே-2014

சங்கரனடிமை

பி.எஸ். சுவாமிநாதன்

மங்கல வாழ்த்து

கல்லால் நிழல் மலை
வில்லார் அருளிய
பொல்லார் இணைமலர்
நல்லார் புனைவரே

அவையடக்கம்

தம்மை உணர்ந்து, தமையுடைய தன், உணர்வார்
எம்மையுடைமை எமையிகழார் - தம்மை
உணரார் உணரார், உடங்கியைந்து தம்மில்
புணராமை, கேளாம் புறன்

உண்மை இயல் முதற் நூற்பா
(பதி உண்மை)

அவன், அவள், அது எனும் அவை,
மூவினைமையின், தோற்றிய திதியே;
ஒடுங்கி மலத்துளதாம் அந்தம் ஆதி, என் மனார் புலவர்

ஆணவ மலநீக்கத்தின் பொருட்டு ஆணும் பெண்ணம் ஒன்றும் பலவுமாகிய பொருள்களின் கூட்டமாய்த் தோன்றி நின்று மறைந்து கொண்டிருக்கும் உலகத்துக்கு அந்தமும் ஆதியுமாக இருப்பது பரம்பொருள்.

சிவஞான சித்தியார் பாடல் - 21

சிவப்பிரகாசர் பாடல் - 13

ஆதி போற்றி! அறிவே போற்றி! (8-தி.மு) (செம்மணி) அனைத்தையும் ஒடுக்கும் அவனே முழுமுதல்!

இரண்டாம் நூற்பா
(பாச உண்மை)

அவையே தானேயாய், இருவினையின்
போக்கு வரவு புரிய, ஆணையின்
நீக்கம் இன்றி நிற்கும், அன்றே

கடவுளின் உயிர்களோடு இரண்டறக் கலந்து நின்றாலும் உயிர்கள், வினை காரணமாகப் பிறப்ட இறப்புக்கு ஆளாகும். தன் ஆணையினால் உயிர் களைப் போக்குவரவு புரியச் செய்யும் பரம்பொருளோ என்றும் ஒரு தன்மை உடையதாக விளங்கும்.

சிவஞான சித்தியார் பாடல் - 91

சிவப்பிரகாசர் பாடல் - 19

பார்பதம் அண்டம், அனைத்து மாய் முளைத்துப் பரந்ததோர் படரொளிப் பரப்பே! (8-தி.மு) (செம்மணி) ஆண்டவன் அருளிய மீண்டும் உலகு உள.

மூன்றாம் நூற்பா
(பசு உண்மை)

உளது இலது என்றலின் எனது உடல் என்றலின்
ஐம்புலன் ஒடுக்கம் அறிதலின் - கண்படில்
உண்டிவினை இன்மையின் உணர்த்த உணர்தலின்
மாயா இயந்திர தனுவினுள் ஆன்மா

உறங்குமபோது அறிவும் செயலும் இன்றிக் கிடக்கும் உடம்பினை விழிப்பு நிலையில் இயங்கச் செய்கின்ற உயிர், உடம்பினை என் உடம்பு என்று உரிமை கொண்டாடுவதாய், உடம்பாகிய தேரில் உலா வருகின்றது.

சிவஞான சித்தியார் பாடல் - 187

சிவப்பிரகாசர் பாடல் - 52

உட்கிடப்ப... (8-தி.மு) (செம்மணி) இன் உடல் அகத்து உயிர் விளக்கம் மன்னும்.

நான்காம் நூற்பா
(பசு உயிர் இயல்பு)

அந்தக் கரணம் அவற்றின் ஒன்றன்று அவை
சந்தித்தது ஆன்மாச் சகசமலத் துணராது
அமைச்சரசு ஏய்ப்ப நின்று அஞ்சவத் ைதத்தே

உடன் பிறப்புப் போன்ற ஆணவ மல மறைப்புடைய உயிர், அமைச்சர்களைப் போன்ற உட்கருவிகளோடு கூடியும் பிரிந்தும் நனவு, உணவு, உறக்கம், பேருறக்கம் உயிர்ப்படக்கம் ஆகிய நிலைகளை அடையும்.

சிவஞான சித்தியார் பாடல் - 91

சிவப்பிரகாசர் பாடல் - 20

புலன்கள் திகைப்பிக்க யானும் திகைத்து இஙகோர் பொய் நெறிக்கே இலங்குகின்றேன். (8-தி.மு) (செம்மணி) ஈண்டிய உயிர் நிலை ஐவகை என்ப.

ஐந்தாம் நூற்பா
(பாச இயல்பு)

விளம்பிய உள்ளத்து மெய், வாய், கண், மூக்கு
அளந்து அறிந்து அறியா; ஆங்கு அவை போலத்
தாம்தம் உணர்வில் தமி அருள்;
காந்தம் கண்ட பசாசத்து அவையே

சிவஞான சித்தியார் பாடல் - 231

சிவப்பிரகாசர் பாடல் - 63

அனைத்துமாய் நின்னை ஐம்புலன்கள் காண்கிலா. (8-தி.மு) (செம்மணி) உயிர்கள்பால் தோன்றும் உடையவன் உதவி.

ஆறாம் நூற்பா
(பதி இயல்பு)

உணர் உரு அசத்து எனின் உணராது இன்மையின்
இருதிறன் அல்லது சிவசத்து ஆம்; என
இரண்டு வகையின் இசைக்கும் மன் உலகே

கடவுள் சிற்றறிவினால் அறிந்துகொள்ளக்கூடிய பொருளன்று, அறிந்து கொள்ளவே முடியாத பொருளும் அன்று. ஆதலின் உயிர்கள் சிற்றறிவினால் அறிந்து கொள்ள முடியாது. அவன் அருளால் அவன் தான் வணங்கலாம் என்று அறிந்தோர் கூறுவர்.

சிவஞான சித்தியார் பாடல் - 240

சிவப்பிரகாசர் பாடல் - 68

எப்பாலவர்க்கும் அப்பாலாம் என் ஆர் அமுது! (8-தி.மு) (செம்மணி) ஊழே ஒரு நிலை! இருநிலைப் பொருள் உள!

அனுபவ இயல் ஏழாம் நூற்பா (ஆன்மா அறியும் முறைமை)

யாவையும் சூனியம் சத்தெதிர், ஆகலின்
சத்தே அறியாது; அசத்து இலது; அறியாது
இருதிறன் அறிவுளது; இரண்டலா ஆன்மா

கடவுளுக்கு முமன் உலகம் ஒளியிழந்து போவதால் கடவுள் உலகத்தை விரும்பி நோற்காது. அறிவற்ற உலகமும் கடவுளை அறியாது. உயிர்களே கடவுளையும் அறியும்; உலகத்தையும் அறியும்.

சிவஞான சித்தியார் பாடல் - 249

சிவப்பிரகாசர் பாடல் - 69

மாலும் காட்டி வழிகாட்டி வாரா உலக நெறியேறக் கோலம காட்டி ஆள்வான் (8-தி.மு) (செம்மணி) என்றும் சார்ந்து நின்றதே உயிர்நிலை.

எட்டாம் நூற்பா
(பக்குவ ஆன்மா ஞானம் உணரும் முறைமை)

ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்து எனத்
தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்தவிட்டு
அன்னியம் இன்மையின் அரன் கழல் செலுமே

ஐம்புல மயக்கத்தில் ஆழ்ந்து கிடக்கும் உயிர், இறைவனே குருவாக வந்து மெய்யுணர்வு அளிக்கும் போது அன்னியமான உலகப்பற்றை விட்டு அன்னியம் இல்லாத இறைவன் திருவடிகளை நாடும்.

சிவஞான சித்தியார் பாடல் - 253

சிவப்பிரகாசர் பாடல் - 71

நினைப்புற நினைந்தேன் நீயலால் பிறிது மற்றும் இன்மை (8-தி.மு) (செம்மணி) ஏற்றமாம் உணர்வை இறையே நல்கும்.

ஒன்பதாம் நூற்பா
(உயிர் பதிஞானம் பெறும் முறைமை)

ஊனக்கண், பாசம் உணராப் பதியை;
ஞானக் கண்ணினில் சிந்தை நாடி;
உராத்துனைத் தேர்த்தெனப் பாசம் ஒருவத்,
தண்ணிழலாம் பதிவிதி எண்ணும் அஞ்செழுத்தே

ஊனக் கண்களால் காண முடியாத கடவுளை ஞானக் கண்களால் தனக்குள் தேடிக் கண்டுகொண்டால் பாசம் அகலும், பதி அருள் கிட்டும், அதன் பொருட்டாக அஞ்செழுத்தினை விதிப்படி எண்ணுதல் வேண்டும்.

சிவஞான சித்தியார் பாடல் - 292

சிவப்பிரகாசர் பாடல் - 76

நானேயோ தவம் செய்தேன் சிவாய நம எனப் பெற்றோன். (8-தி.மு) (செம்மணி) ஐயன் அஞ்செழுத்தால் அருமலம் கழலும். அகலும்.

பத்தாம் நூற்பா
(பாச நீக்கம்)

அவனே தானே ஆகிய அந்நெறி
ஏகனாகி, இறைபணி நிற்க,
மலம் மாயை தன்னொடு வல்லினை இன்றே

எல்லாம் இறைவன் செயல் என்பதனை உணர்ந்து நான் செய்கிறேன் என்ற செருக்கு நீங்கித் தன் செயல் எல்லாம் சிவன் செயலாகும்படி இறைவனோடு உள்ளத்தால் ஒன்றி நின்றால் மலமும் மாயையும் வினையும் இல்லை.

சிவஞான சித்தியார் பாடல் - 304

சிவப்பிரகாசர் பாடல் - 80

அருவினைச் சுற்றமும் மாண்டு அவனியின் மேல் மயல் மாண்டு மற்றுள்ள வாசகமும் மாண்டு என்னுடைய செயல் மாண்டவாபாடி (8-தி.மு) (செம்மணி) ஒட்டிய கட்டினை விட்டு அகல் விடு.

பதினோராம் நூற்பா
(சிவப்பேறு)

காணும் கண்ணுக்குக் காட்டும் உளம்போல்
காண உள்ளத்தைக் கண்டு காட்டலின்
அயரா அன்பின் அரன்கழல் செலுமே

அறிவிக்க அறியும் இயல்பு உடைய உயிர்களுக்கு உள் நின்று உணர்த்திய முதல்வன், உயிர்கள் தன்னை நாடி வரும்போது முன் நின்று தன்னையே காட்டுவதனால் தம்மை உணர்ந்து, தம் முதல்வனையும் உணர்ந்த உயிர்கள் குறையாது பெருகும் அன்போடு அரன் கழலையே நாடிச் செல்லும்.

சிவஞான சித்தியார் பாடல் - 310

சிவப்பிரகாசர் பாடல் - 93

நேசத்தால் பிறப் பிறப்பைக் கடந்தார் தம்மை ஆள்பவன். (8-தி.மு) (செம்மணி) ஓவா இன்பம் இறை அடி உறுதல்.

பன்னிரண்டாம் நூற்பா
(ஞானியர் இயல்பு)

செம்மலர்நோன் தாள் சேரல் ஒட்டா
அம்மலம் கழீஇ அன்பரொடு மரீஇ
மாலற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயந் தானும் அரன் எனத் தொழுமே

அயராத அன்புடைய சிவ ஞானியர் ஆணவ அழுக்கினை முழுவதும் அகற்றி, ஆணவத்தை அகற்றிய அன்பர்களோடு கூடி அடியவர் வேடத்தையும், திருக்கோயில் உள்ளிருக்கும் திருமேனிகளையும் சிவமாகவே கருதி வழிபடுவர்.

சிவஞான சித்தியார் பாடல் - 322

சிவப்பிரகாசர் பாடல் - 98

ஆசையெலாம் அடியார் அடியோம் எனும் அத்தனை ஆகாதே! (ஆகும்) (8-தி.மு) (செம்மணி) ஒளவியம் இலா இடத்து அரன் வெளியாமே!

நூல் சிறப்பு

வேதம் பசு; அதன் பால்
மெய் யாகமம்; நால்வர்;
ஓதும் தமிழ் அதனின்
உள்ளூறு நெய் - போதமிகு
நெய்யின் உறு சுவையாம்
ஒள் வெண்ணெய்;
மெய்கண்டான்
செய் தமிழ் நூலின் திறம்.

இந்நூல் வேண்டற்குரியவர்

சிவம் என்னும் அந்ததர
சிந்தைநேர் நோக்கப்
பவம் இன்றாம் கண்வா
சகத்தின் - சிவம் உண்டாம்
ஒன்றும் இரண்டும் மலத்தார்க்கு
இங்கு ஒண் குருவால்
இன்று இந்நூல் மும்பை மலர்க்கு
நாற்ப தடியால் இருநூற்றுப்
பதினாறு எளிய நற்சொல்லால்
எந்த அறுநூற்று இருபான் நான்கு
எழுத்தால் சமயக் கொள்கை எலாம்
தேற்றித் தெருட்டும் சிவஞான
போதச் செழுநூல் போல் எங்கும்
வேற்றோர் நூல் இல் என உரைப்பின்
மிக்க அதன்சீர் விளம்புவர் யார்?

- சிவ. பி.எஸ். சுவாமிநாதன்

நூல் காணிக்கை

திருவருணை சித்தத்தைச் சிவன் பாலே வைத்த அடியேனின் தாயார் சீரடியார் தெய்வத்திரு தனம்மாள் அம்மையாரின் 33-ஆம் ஆண்டு சொரியும் நற்கருணை நினைவுக் காணிக்கை.

அமரர் ஆன தினம் : 11-09-1981







சிவ சிவ

சங்கரனடிமை சிவ பி.எஸ். சுவாமிநாதன்

எண் : 1, பள்ளி விநாயகர் கோவில் தெரு,
திருமுல்லைவாயில், சென்னை-600 062.